1978 மார்ச் 14]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வீடு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட அதிகமாவதற்குக் காரணங்கள் சொன்னேன். நிலத்தை ஆர்ஜிதம் பண்ணும்போது நாம் ஒரு விலையை நிர்ணயிக்கிறோம். நிலச் சொந்தக்காரர்கள் வழக்கு மன்றத்திற்குப் போய் அதிகமான விலை கொடுக்கவேண்டுமென்று தீர்ப்பு வாங்குகிறார்கள். வீடு கட்டிக் கொண்டு போகும்போது சில நேரங்களில் மெட்டீரியல் காஸ்ட் ஏற்படுகிறது. அது எப்படி இருந்தாலும் முறையீடுகள் வந்திருப்பதால் அதைப் பற்றிப் பரிசீலிப்பதற்கு சர்வ கட்சிக் கூட்டம் நடந்திருக்கிறது. அதில் மாண்புமிகு உறுப்பினர்கள் கட்சியைச் சார்ந்த பெரும் தலைவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றிய முடிவு விரைவில் எடுக்கப்படும்.

மன்னார்குடியில் தொழிலாளர் நல மருத்துவமனை.

*558 வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மன்னார்குடியில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை ஏற்படுத்த அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இல்லை.

(முற்பகல் 9-20).

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி பகுதியைச் சுற்றி திரு. ஆரூரான் சர்க்கரை ஆலையும் பாமிணி உரத் தொழிற்சாலையும் சி. டபிள். சி.யும் இப்படி பல்வேறு தொழிற்சாலைகள் இருப்பதால் அங்கே ஒரு இ.எஸ்.ஐ. மருத்துவ மனை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆரூரான் சர்க்கரை ஆலை திருவாரூரைச் சுற்றி இருக்கிறது.

புதுக்கடை நகரப் பஞ்சாயத்துக் குடிநீர் வழங்கல்.

*559 வினா—திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், புதுக்கடை நகரப் பஞ்சாயத்துப் பகுதிகளுக்கான குடிநீர் வழங்கு திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) திட்டத்திற்கு ஆகும் செலவை ஏற்கும் வகையில் புதுக்கடை பேரூராட்சி, மற்றும் முன்சிறை, பார்த்திவபுரம் ஆழங்குளம் ஊராட்சிகளின் நிதி நிலைமை உள்ளதா என்பது பற்றிய ஊரக வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை கிடைத்ததும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திட்டத்தை அரசின் நிர்வாக ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கும். அரசு ஒப்புதல் கொடுத்த பிறகு அத்திட்டம் துவங்கப்படும்.

'படகர்' வகுப்பினர்.

*560 வினா—திரு. போ. கோபாலன்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி வாழ் 'படகர்' இனத்தவரை (பின்தங்கிய வகுப்பினர்) தாழ்த்தப்பட்ட பழங்குடியினராக (Scheduled Tribes) கருதி அவ்வாறு ஆணை பிறப்பிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு பெ. சௌந்தரபாண்டியன் : பழங்குடியினரிடையே காணப்படும் தனித்தன்மையான பண்புகள் நீலகிரிப் பகுதியில் வாழும் படகர் இனத்தவரிடையே காணப்படாததால் படகர் இனத்தவரை ஆதிவாசிகளின் பட்டியலில் சேர்க்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. போ. கோபாலன்: பழங்குடியினரிடையே உள்ள பழக்க வழக்கங்கள் படகர்களிடையே காணப்படவில்லை என்று யார் சொன்னது? அப்படிப்பட்ட அறிக்கையை அளித்தது எந்தக் குழு? அப்படியே சொல்லி இருந்தாலும் அது உண்மையல்ல என்பது அரசுக்குத் தெரியுமா? அவர்களுடைய பழக்க வழக்கங்களும், பொருளாதாரத் துறையிலேயும், கல்வித்துறையிலேயும் அவர்கள் பின் தங்கியவர்களாக இருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் மட்டுமே வாழக்கூடிய தனிப் பிரிவினராக அந்த மக்கள் இருப்பதால் அரசாங்கம் மீண்டும் அதைப் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஒரு குறிப்பிட்ட இனத்தவரை ஆதிவாசிகள் பட்டியலில் சேர்க்கவேண்டுமென்றால் கீழ்க்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

காலத்தால் மாறுபட்ட நாகரீக முன்னேற்றம் பெறாத நிலைமை, தனித்தன்மை பெற்ற பழக்க வழக்கங்கள், புவியியலமைப்பின் காரணமாக சிதறிக் கிடக்கும் நிலைமை, பெரும்பான்மையான பிற மக்களுடன் தொடர்பு கொள்வதில் அச்சம் அல்லது வெட்கப்பட்டு நிற்கும் நிலைமையிலுள்ள பிற்போக்குத் தன்மை. மேற்கண்ட